

# பாரம்பரிய ஊடக மையமும் கீர்த்தனை பெருவிழாவும்

**குறிக்கோள்**

தமிழ் கலை, பண்பாடு மற்றும் பாரம்பரிய முறைகளை இன்றைய இளைஞர் மற்றும் ஆர்வம் உள்ள நபர்களிடையே எடுத்துச்சென்று, புதுமையான, ஆக்கபூர்வமான சிந்தனைகளை வெளிக்கொணர்தல், இசை, நாடகம், நாட்டியம் போன்றவற்றின் மூலம் சமூக விழிப்புணர்வு மற்றும் கிறிஸ்தவ கொள்கைகளையும் கொண்டு செல்லுதலும் ஆகும்.

**நோக்கம்**

- நமது நாட்டுப்புற மற்றும் பாரம்பரிய கலைகளையும், இசை, நாடகம், நாட்டியம் போன்றவற்றை முறையான பயிற்சி அளித்து, தமிழப் பண்பாட்டு கலாச்சார செறிவை பாதுகாத்து அவற்றில் முறையான பயிற்சி அளித்து உயிர்ப்பிக்கவும், செம்மை படுத்துவதும்.

- கருத்தருங்குகள், பயிற்சி பட்டறைகள், போட்டிகள், புராதான சின்னங்கள், பழமையான வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களுக்கு இளையோரை அழைத்துச்சென்று அவர்களுக்கு பண்பாடு, கலைச்சின்னங்களின் அவசியத்தை உணரவைப்பது அவைகளை பாதுகாக்க உற்சாகப்படுத்துவது.

- கல்விக் கூடங்களில் பகுதி நேரமாகவோ அல்லது முழுநேர பட்டப் படிப்புகள் அல்லது சான்றிதழ் படிப்பு அறிமுகப்படுத்தி வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

- கலை என்பது மனிதனின் சுக, துக்கங்களை வெளிப்படுத்துவதற்கான சாதனமாகும். கண்காட்சிகள், கலாச்சார விழாக்கள் போன்ற வாய்ப்புகளை ஏற்படுத்தி ஆக்கபூர்வமான சிந்தனைகளை தூண்டுதல்.

- கலைஞர்களிடையே தலைமைத்துவ பண்புகளை உருவாக்கி அல்லது கண்டறிந்து அவர்கள் இருக்கும் இடங்களில் குருகுலக் கல்வி அல்லது சூழலுக்கு ஏற்பவோ கலை பண்பாட்டை பிறருக்கு கற்றுக் கொடுக்க செய்தல்.

**கீர்த்தனை பெருவிழா ஏன்?**

இசை மனுக்குலத்தின் பொதுச்சொத்து, மேலும் செவிக்குணவாக அமைந்து மனிதர்களின் வாழ்க்கையில், மகிழ்ச்சியைப் பெருக்கும் ஒரு முக்கிய அம்சமாக இசை விளங்குகிறது. மன இறுக்கத்தால் அவதிப்படுபவர்கள் ஒவ்வொருநாளும் ஒன்றிரண்டு மணி நேரம் இசை கேட்கும் வழக்கத்தை மேற்கொண்டால் மன இறுக்கம் குறைந்து சரீர சுகம் பெருகும்.

''கர்நாடக'' என்ற பதம் ''மிகப்பழமையான'' என்ற பொருள்படும். உலக அளவில் இவ்வளவு அதிகமான தாய் ராகங்களைக் கொண்ட ஒரே அமைப்பு கர்நாடக இசை ஒன்றுதான். இவற்றிலிருந்து ஸ்வரவர்கம் ( = delection of one or two swaras) ஸ்வரவக்ரம் ( = rearrangement of the order of swaras), அந்நியஸ்வரக்கலப்பு (= வேறு தாய் ராகஸ்வரங்களைக் கலத்தல்), ஸ்வரமேல் வரம்பு ஆகிய முக்கிய மாற்றங்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான கிளை ராகங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. கிறிஸ்தவ இசை அறிஞர்களும் இந்த ராக அமைப்பைக் கற்றறிந்து ஏராளமான கீர்த்தனைகளை இயற்றிக் கர்த்தரைப் பாடி மகிமைப்படுத்தியுள்ளனர். தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, நாகர்கோவில் ஜான் பால்மர், சென்னை பரமானந்தம் ஐயர் ஆகியோர் அந்த இசைப்புலவர்களில் ஒருசிலராவர். கிறிஸ்தவ சபையாரின் பக்திவிருத்திக்கு அனுகூலமான ஏராளமான கீர்த்தனைகள் இக்காலத்தில் கர்நாடக இசையில் அமைந்துள்ளன. பாடகர்களின் எண்ணிக்கை தான் மிகவும் குறைவாக உள்ளது.

பக்தி பாடல்களைக் கேட்பதன் மூலம் பாடுவதன் மூலமும் பாடல்களில் உள்ள உயர்ந்த கருத்துக்கள் மனதில் பதிந்து விசுவாசம் வளர வழி ஏற்படும்.

கிறிஸ்தவ கீர்த்தனைகளைத் தூய தமிழ் இசையில் பாடவும், பாடல்களைக் கேட்கவும், கிறிஸ்தவ சபையார் முயல வேண்டும். அது பக்திவிருத்திக்கு ஏற்ற முக்கிய சாதனமாக அமைவதற்கு வாய்ப்பு உண்டு.

*நன்றி :Dr. S.அலெக்ஸாண்ட®*

திருமதி.சுசீலா வில்லியம்
திரு.ஸ்டீபன்
திரு.விஜயகுமார்
*அப்பாசாமி கலை அறிவியல் கல்லூரி*